# என் உயிரினும் மேலான டிஜிட்டல் யுகத்தில் சொற்கள் வென்ற கதை!

இன்றைய டிஜிட்டல் காலத்தில் மனிதர்கள் நொடிகளில் வாழ்கிறார்கள். வாட்ஸ்அப் ஸ்டேட்டஸ், இன்ஸ்டாகிராம் ரீல்ஸ், யூடியூப் ஷார்ட்ஸ் என குறுகிய கால காணொளிகளுக்கு அடிமையாகிப் போயிருக்கிறோம். இத்தகைய சூழலில் பேச்சுக்கலைக்கு இடமில்லை என்ற கருத்து பரவலாக நிலவி வந்தது. ஆனால் கலைஞரின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் விதமாக தமிழக முதல்வரின் வழிகாட்டுதலில், துணை முதல்வர் மேற்பார்வையில் திமுக இளைஞரணி ஏற்பாடு செய்திருந்த “என் உயிரினும் மேலான” என்ற மாநிலம் தழுவிய பேச்சுப் போட்டி, இந்தக் கருத்தை முற்றிலும் மாற்றியமைத்துள்ளது.

தமிழகம் முழுவதும் 17,000க்கும் மேற்பட்டோர் இப்போட்டியில் பங்கேற்றனர். இது வெறும் எண்ணிக்கை அல்ல. ஒவ்வொரு போட்டியாளரும் திராவிட இயக்க வரலாற்றை ஆழமாக ஆய்வு செய்து, நூல்களைப் படித்து, குடும்பத்தினருடன் விவாதித்து, கள ஆய்வுகள் மேற்கொண்டு தயாராகி வந்தனர். பயிற்சி தந்த கழக தோழர்களையும் சேர்த்து, குடும்பத்திற்கு நான்கு பேர் என்ற அடிப்படையில் பார்த்தால், சுமார் ஒரு லட்சம் பேர் இந்த அறிவுப் பயணத்தில் நேரடியாகவும் மறைமுகமாகவும் பங்கேற்றனர்.

பல்வேறு கட்ட தேர்வுகளுக்குப் பிறகு 182 பேர் இறுதிப் போட்டிக்குத் தேர்வானார்கள். ஒவ்வொரு கட்டமும் மிகுந்த நேர்மையுடனும், வெளிப்படைத் தன்மையுடனும் நடத்தப்பட்டது. போட்டியாளர்களின் தகுதி, திறமை, பேச்சின் உள்ளடக்கம், வழங்கும் முறை என அனைத்தும் நுணுக்கமாக ஆராயப்பட்டன. இறுதி போட்டியில் மோகநிதி, சிவரஞ்சனி, வியானி விஷ்வா ஆகியோர் முறையே முதல் மூன்று இடங்களைப் பிடித்தனர். வெற்றியாளர்களுக்கு முதல்வர் பரிசு வழங்கி சிறப்பித்தார்.

### மாநிலம் தழுவிய பேச்சுப் போட்டிக்கு மானசீகமாக உதவிய கலைஞர்

கலைஞர் தனது பேச்சின் மூலம் மக்களைக் கட்டிப்போட்டவர். அவரது பேச்சுமுறைத் திறமையான பல உள்ளடுக்குகளைக் கொண்டது. எளிமையாக, எல்லோருக்கும் புரியும் வகையில் பேச வேண்டும் என்பதே அவரது முதன்மை நோக்கமாக இருந்தது. தமிழ் மொழியின் அழகையும் துல்லியத்தையும் பயன்படுத்தி, மக்களின் நம்பிக்கையை ஊட்டக்கூடிய சொற்களால் தனது உரைகளை அமைக்கக் கற்றிருந்தார். தமிழின் சங்க இலக்கியம் முதல் அவற்றின் குறியீடுகள், தத்துவம், மற்றும் தமிழ் சான்றோர்களின் கதைகளை அடிப்படையாகக் கொண்டு உரையாடலில் வழிகாட்டுதல்களை வழங்கியதால், அவரது பேச்சின் துல்லியமும் ஆழமும் எளிமையாக வெளிப்பட்டது.

கழகத்தில் கலைஞர் உருவாக்கிய பேச்சுமுறை ஒவ்வொருவருக்கும் ஒரு பெரிய முன்னுதாரணமாக அமைந்தது. அவரது பேச்சு முறையின் தனித்தன்மை மற்ற உறுப்பினர்களின் பேச்சிற்கும், கழக தோழர்களின் விளக்க உரைகளுக்கும் ஆதாரமாக அமைந்தது. இளம் பேச்சாளர்களுக்கும் முக்கியத் தலைவர்களுக்கும் அவர் உருவாக்கிய தரத்தைப் பின்பற்ற வாய்ப்புக் கிடைத்தது. உரை நிகழ்த்தும் போது, எளிமையாகவும் சுவாரஸ்யமாகவும் மக்களுக்கு எட்டுமாறு பேச வேண்டும் என்பதற்கான கோட்பாடுகளைக் கற்றுக் கொடுத்தார்.



எஸ்.கே.பி. கருணா
செயலாளர் - தி.மு.க.
பொறியாளர் அணி

கலைஞரின் வார்த்தைகள் எவ்வாறு மக்களின் மனசாட்சியைக் குலுக்கியதோ, அதேபோல் இளம் பேச்சாளர்கள் சமூக நீதியை முன்னிறுத்தி உரையாடினார்கள். அவர்களின் பேச்சுகளில் கலைஞரின் பாரம்பரியப் பேச்சுமுறையின் தாக்கம் இருந்தது. இதன் மூலம், கட்சியை வலுப்படுத்தவும், அதன் அடிப்படைக் கொள்கைகளை மக்களுக்கு எடுத்துச் செல்லவும் இளம் பேச்சாளர்கள் முனைப்புக் காட்டினர்

### மேடைப் பேச்சு: கலைஞரின் பாதையில் முதல்வரும், துணை முதல்வரும்

கலைஞரின் மேடைப் பேச்சு தமிழ் மொழியின் செழுமையான பயன்பாட்டை முன்னிறுத்தியது. சமூக நீதியை அடிப்படையாகக் கொண்ட அவரது கருத்தாக்கங்கள் எளிய மக்களுக்கும் புரியும் வகையில் அமைந்திருந்தன. நகைச்சுவையும், கேள்விபதில் பாணியும், உணர்ச்சிகரமான மொழி நடையும் அவரது பேச்சின் தனித்துவமான அம்சங்களாகத் திகழ்ந்தன.

நம் தலைவர் தனது தந்தையின் பாணியிலிருந்து பல அம்சங்களைக் கற்றுக்கொண்டாலும், அவருக்கென தனிப் பாணியை உருவாக்கியுள்ளார். நிர்வாக அனுபவத்தை முன்னிறுத்தி, திட்டங்களின் விவரங்களைத் துல்லியமாக விளக்குவதில் சிறந்து விளங்குகிறார். நவீன தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, சமூக ஊடகங்களில் இருந்து எடுத்துக்காட்டுக ளைத் தருவதும், டிஜிட்டல் முறையில் தகவல்களைப் பரிமாறுவதும் அவரது பாணியின் சிறப்பம்சங்கள். எதிர்தரப்பினரின் குற்றச்சாட்டு களுக்குத் தர்க்கரீதியான பதில்களை ஆதாரங்களுடன் வழங்குவதில் வல்லவர்.

துணை முதல்வர் மரபைப் பின்பற்றும் அதே வேளையில் தனக்கென ஒரு பாணியை, நவீன காலத்திற்கு ஏற்ற பேச்சுமுறையைக் கையாளுகிறார், இளைஞர்களைக் கவரும் வகையில் உரை யாற்றுகிறார். விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் துறையில் அவர் கொண்டிருக்கும் அனுபவம் பெரிய அளவில் இளம் தலைமுறை யினரை ஈர்க்க உதவுகிறது. இட ஒதுக்கீடு மற்றும் சமூக நீதி குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் பெரியார் அண்ணா கலைஞர் கொள்கைகளை இன்றைய காலத்திற்கு ஏற்ப விளக்கி வருகிறார்.

மேடைப் பேச்சு என்பது வெறும் சொற்களின் தொகுப்பு அல்ல, அது மக்களோடு உரையாடும் ஒரு சக்திவாய்ந்த கருவி என்பதை மூவரும் தங்கள் பாணியில் நிரூபித்துள்ளனர். இந்த நிலையில்தான் கலைஞர் நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தை முன்னிட்டு 100 இளம் பேச்சாளர்களை உருவாக்கும் திட்டத்தை முதல்வர் முன்மொழிந்தார்.

மேடைப் பேச்சின் இந்த மூன்று மகத்தான தலைமுறைகளைத் தாண்டி அப்படி என்ன பேசிவிடப் போகிறார்கள் இந்த இளம் தலைமுறையினர் என்ற எதிர்பார்ப்பு அனைவருக்கும் இருந்தது.

எப்படிப் பேசினர்?: திராவிட மாடலின் பேச்சுப் போட்டிகள் எப்படி தனித்துவமாக அமைகின்றன?

போட்டியாளர்கள் பேச்சின் உள்ளடக்கத்தை மட்டுமல்ல, வழங்கும் முறையையும் தற்கால சூழலுக்கு ஏற்பப் புதுப்பித்தனர். பேச்சின் ஆரம்பமே பார்வையாளர்களின் கவனத்தைக் கவரும் விதமாக அமைந்தது. துல்லியமான புள்ளி விவரங்களும், உணர்வுபூர்வமான கதைகளும், நகைச்சுவை கலந்த சம்பவங்களும் கலந்து வழங்கப்பட்டன. சமூக ஊடகங்களில் பரவும் டிரெண்டிங் விஷயங்களை உதாரணங்களாகப் பயன்படுத்தினர். இளைஞர்கள் பேசும் மொழியில், அவர்கள் புரிந்துகொள்ளும் விதத்தில் கருத்துக்கள் வழங்கப்பட்டன.

நவீன சினிமாக்கள், விளையாட்டுகள், சமூக ஊடக நிகழ்வுகள், வைரல் வீடியோக்கள், இணைய மீம்கள் என இளைஞர்களின் அன்றாட வாழ்வில் இருந்து எடுத்துக்காட்டுகள் தரப்பட்டன. உடல் மொழியின் ஒவ்வொரு கூறும் மிகவும் நுணுக்கமாகக் கையாளப்பட்டது. மேடையில் நிற்கும் நிலை, கை அசைவுகள், முக பாவனைகள், கண் பார்வை, குரல் ஏற்ற இறக்கங்கள் என அனைத்தும் சிறப்பாகத் திட்டமிடப்பட்டுப் பங்கேற்பாளர்களுக்குக் கழகத் தோழர்களால் பயிற்சியும் வழங்கப்பட்டன. உணர்ச்சிகரமான தருணங்களில் குரல் உயர்த்தப்பட்டது. சிந்தனைக்குரிய கருத்துக்களின்போது குரல் தாழ்த்தப்பட்டது. இடையிடையே நகைச்சுவை கலந்து பார்வையாளர்களின் கவனத்தைத் தக்க வைத்தனர்.

பங்கேற்பாளர்களின் பேச்சுகள் உடனுக்குடன் சமூக ஊடகங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டன. அவற்றைப் பகிரும்போதும் புதிய உத்திகள் கையாளப்பட்டன. முக்கியமான கருத்துக்கள் ஒரு நிமிட ரீல்ஸ்களாக வெளியிடப்பட்டன. சிறப்பான தருணங்கள் ஸ்டேட்டஸ்களாகப் பகிரப்பட்டன. முழுப் பேச்சும் கலைஞர் டிவியின் யூடியூப் பக்கத்தில் வெளியிடப்பட்டு, அதன் முக்கியப் பகுதிகள் சிறு காணொளிகளாக வெளியிடப்பட்டன. இது இளைஞர்களை முழுப் பேச்சையும் கேட்கத் தூண்டியது. இவ்வாறு டிஜிட்டல் யுகத்தில் பேச்சுக்கலை புதிய பரிமாணம் பெற்றது.

### என்ன பேசினர்?: இவர்களின் பார்வையில் திராவிட மாடல்

பேச்சுப் போட்டியில் பங்கேற்ற பேச்சாளர்கள், திராவிட மாடலை ஒரு புதிய கோணத்தில் அலசி ஆராய்ந்தனர். வெறும் வரலாற்றுச் சாதனைகளாக அல்லாமல், தற்கால சவால்களுக்கான தீர்வுகளின் களஞ்சியமாக அதனை முன்னிறுத்தினர். கல்வியில் சமவாய்ப்பு, வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீடு, பொருளாதார முன்னேற்றத்தில் அனைவருக்கும் பங்கு என்ற சமூக நீதியின் அடிப்படைக் கோட்பாடுகள், இன்றைய காலகட்டத்தில் எவ்வாறு புதிய பரிமாணங்களைப் பெறுகின்றன என்பதை விளக்கினர்.

சாதி ஒழிப்பு, பெண் விடுதலை, சமய நல்லிணக்கம் போன்ற சமத்துவக் கொள்கைகள் இன்றைய சூழலில் எதிர்கொள்ளும் புதிய சவால்களை அடையாளம் கண்டனர். நகர்ப்புறங்களில் மறைமுகமாக நிலவும் சாதியப் பாகுபாடுகள், பணியிடங்களில் பெண்கள் எதிர்கொள்ளும் பாலினப் பாகுபாடுகள், சமூக ஊடகங்களில் பரவும் மத வெறுப்புணர்வு போன்றவற்றிற்கான தீர்வுகளை முன்மொழிந்தனர்.

பகுத்தறிவுச் சிந்தனையின் அவசியத்தை டிஜிட்டல் யுகத்தின் சூழலில் புதிய கோணத்தில் விளக்கினர். பொய்யான செய்திகள், மூட நம்பிக்கைகள், அறிவியலுக்குப் புறம்பான கருத்துக்கள் வேகமாகப் பரவும் இக்காலத்தில், தர்க்க ரீதியான சிந்தனை முறையின் அவசியத்தை வலியுறுத்தினர். சமூக ஊடகங்களில் விவாதக் கலாச்சாரத்தை வளர்க்க வேண்டியதன் தேவையை எடுத்துரைத்தனர்.

தமிழ் மொழியின் வளர்ச்சியில் திராவிட இயக்கம் ஏற்படுத்திய மாற்றங்களை விரிவாக ஆவணப்படுத்தினர். கல்வி மற்றும் ஆட்சி மொழியாகத் தமிழின் பயன்பாடு, கலை இலக்கியத் துறையில் ஏற்பட்ட முன்னேற்றம், டிஜிட்டல் யுகத்தில் தமிழின் புதிய பரிமாணங்கள் ஆகியவற்றை விளக்கினர். தமிழ் மொழியின் தொழில்நுட்ப வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புகளையும் சுட்டிக்காட்டினர்.

### பெண்களின் பங்களிப்பு புதிய பரிணாமம்

என் உயிரினும் மேலான பேச்சுப் போட்டி, பெண்களின் பங்களிப்பில் ஒரு புதிய அத்தியாயத்தை எழுதியுள்ளது. காந்தியின் காலம் முதலே பெண்களின் அரசியல் பங்கேற்பு முக்கியமானதாகக் கருதப்பட்டு வந்தாலும், அது முழுமையாகச் சாத்தியமாகவில்லை என்பது வரலாற்று உண்மை. ஆனால் இந்தப் போட்டி, பெண்கள் தங்கள் கருத்துக்களைத் தைரியமாக வெளிப்படுத்தும் தளமாக மாறியது மட்டுமல்லாமல், அவர்களின் சிந்தனைத் திறனையும், ஆளுமையையும் வெளிப்படுத்தும் களமாகவும் மாறியது.

பெரியார், அண்ணா, கலைஞர் வழியில் வந்த திராவிட இயக்கம் பெண் விடுதலைக்கு அளித்த முக்கியத்துவத்தை இளம் பெண்கள் தங்கள் பேச்சுகளில் விரிவாக விளக்கினர். சமூக சீர்திருத்தங்கள், சட்ட மாற்றங்கள், பெண் கல்வி வளர்ச்சி, பெண்களுக்கான இட ஒதுக்கீடு என பல்வேறு கோணங்களில் பெண்களின் முன்னேற்றத்திற்கான வரலாற்றை ஆவணப்படுத்தினர்.

பேச்சுப் போட்டிகளில் பெண்களின் பங்கேற்பு என்பது வெறும் எண்ணிக்கை சார்ந்த விஷயம் அல்ல. அது ஒரு சமூக மாற்றத்தின் அடையாளம். பொது வெளியில் பெண்கள் தங்கள் குரலை உயர்த்துவது, தங்கள் கருத்துக்களைத் தைரியமாக முன்வைப்பது, விவாதங்களில் பங்கேற்பது என்பது சமூக முன்னேற்றத்தின் அறிகுறி. இந்தப் போட்டி அத்தகைய மாற்றத்திற்கு வித்திட்டுள்ளது.

### சொல்லி அடித்த துணை முதல்வர்:

அரசியல் தலைமைத்துவத்தின் உன்னத வெளிப்பாடாக அமைந்துள்ளது இந்த மாபெரும் பேச்சுப் போட்டி நிகழ்வு. 17,000 போட்டியாளர்களை ஒருங்கிணைத்து, அவர்களின் திறமைகளை வெளிக்கொணர்ந்த விதம் பாராட்டுக்குரியது.

இளம் வயதிலேயே இத்தகைய பெரும் பொறுப்பை ஏற்று, அதனை சிறப்பாக நிறைவேற்றியுள்ளார் துணை முதல்வர். அவரது தலைமைத்துவப் பண்புகளில் குறிப்பிடத்தக்கது, அனைவரையும் அரவணைத்துச் செல்லும் திறன். மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நடுவர்கள் என அனைவரையும் ஒருங்கிணைத்து, ஒவ்வொருவரின் பங்களிப்பையும் உறுதி செய்தார்.

85 நடுவர்களின் அறிவுத் திறனை பயன்படுத்தி, போட்டியாளர்களுக்கு பயிற்சி அளித்தது சிறப்பான முடிவு. 17,000 பேரிலிருந்து 913 பேரை தேர்ந்தெடுத்து, பின்னர் 182 பேருக்கு தீவிர பயிற்சி வழங்கியது, திறமையான தேர்வு முறையை காட்டுகிறது. ஒவ்வொரு கட்டத்திலும் போட்டியாளர்களின் திறமைகளை மேம்படுத்த எடுக்கப்பட்ட முயற்சிகள் பாராட்டத்தக்கவை.

பத்து தலைப்புகளில் நடைபெற்ற போட்டிகளை நேரடியாக பார்வையிட்டு, போட்டியாளர்களுடன் கலந்துரையாடி, ஊக்கமளித்தது அவரது அக்கறையை வெளிப்படுத்துகிறது. இது இளைய தலைமுறையினரை ஊக்குவிக்கும் சிறந்த முன்னுதாரணமாக அமைந்துள்ளது.

கழகத்தின் மரபுவழி வந்த தலைமைத்துவப் பண்புகளான அனைவரையும் அரவணைத்தல், ஒற்றுமை யுடன் செயல்படுதல், இளைய தலைமுறையினரை ஊக்குவித்தல் ஆகியவற்றை இந்த நிகழ்வின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். இது அவரது அரசியல் முதிர்ச்சியையும், தலைமைத்துவத் திறனையும் எடுத்துக்காட்டுகிறது. அனைவரையும் ஒருங்கிணைத்து, ஒரு குறிக்கோளை நோக்கி வழிநடத்தும் அவரது தலைமைத்துவப் பாணி, கழகத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும்.

இந்த நிகழ்வு வெறும் பேச்சுப் போட்டியாக மட்டுமல்லாமல், ஒரு இளம் தலைவரின் தலைமைத்துவத் திறனின் வெளிப்பாடாகவும், கழக மரபின் தொடர்ச்சியாகவும் அமைந்துள்ளது. இது வரும் காலங்களில் மேலும் பல சாதனைகளை படைக்க அவருக்கு ஊக்கமளிக்கும் என்பதில் ஐயமில்லை.

### சமூக மாற்றத்தின் புதிய அத்தியாயம் போட்டியின் தாக்கம்

என் உயிரினும் மேலான போட்டி வெறும் பேச்சுப் போட்டியாக மட்டுமல்லாமல், சமூகத்தின் பல்வேறு தளங்களில் ஆழமான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

**கல்வித்துறையில்:**

மாணவர்களிடையே பேச்சுக்கலை மீதான ஆர்வம் அதிகரித்துள்ளது. பள்ளி-கல்லூரிகளில் விவாத மன்றங்கள் புத்துயிர் பெற்றுள்ளன. பேச்சாற்றல், ஆய்வுத்திறன், பகுப்பாய்வுத்திறன் போன்றவை வளர்க்கப்படுகின்றன

**அரசியல் களத்தில்:**

இளைஞர்கள், பெண்கள் தைரியமாகக் கருத்துரைக்கத் தொடங்கியுள்ளனர். புதிய தலைமைகளை உருவாக்கும் பயிற்சி முகாம்கள் நடைபெறுகின்றன. அரசியல் விவாதங்களின் தரம் உயர்ந்துள்ளது.

**சமூக மாற்றங்கள்:**

பகுத்தறிவுச் சிந்தனை வலுப்பெற்றுள்ளது. சாதி, மத, இன வேறுபாடுகளற்ற சமத்துவச் சிந்தனை பரவுகிறது. சமூக ஊடகங்களில் விவாதங்களின் தரம் மேம்பட்டுள்ளது.

**எதிர்கால நோக்கு:**

என் உயிரினும் மேலான பேச்சுப் போட்டி ஒரு சமூக இயக்கமாக மாறியுள்ளது. டிஜிட்டல் யுகத்தில் பேச்சுக்கலையின் முக்கியத்துவத்தை நிலைநாட்டியுள்ளது. திராவிட இயக்கத்தின் கொள்கைகளைப் புதிய தலைமுறைக்குக் கொண்டு செல்வதில் வெற்றி பெற்றுள்ளது. இந்த மாற்றங்கள் நீண்ட காலத் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

இந்த மாபெரும் போட்டி உருவாக்கியுள்ள புதிய தலைமுறைப் பேச்சாளர்கள், வரும் காலங்களில் சமூக மாற்றத்திற்கான முக்கியத் தூதுவர்களாகச் செயல்படுவர். பேச்சுக்கலையின் மூலம் சமூக மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்பதை இப்போட்டி மீண்டும் நிரூபித்துள்ளது.

ஒரு கருத்து எப்படி உருவாகிறது என்பதை யோசித்துப் பார்த்தால், அது ஒரு உரையாடலில் தொடங்குகிறது. அந்த உரையாடல் விவாதமாக மாறுகிறது. விவாதம் கருத்தாக உருவெடுக்கிறது. கருத்துக் கொள்கையாக மாறுகிறது. கொள்கை செயல்பாடாக மலர்கிறது. இந்த வளர்ச்சிப் பாதையில் பேச்சுக்கலை முக்கியப் பங்கு வகிக்கிறது.

களம் எதுவாக வேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போகட்டும். அங்கே கருத்துக்களை உருவாக்க, கருத்துச் சொல்ல நாங்கள் மட்டும்தான் இருப்போம் என்பதை உரத்துச் சொல்லியிருக்கிறார்கள் நம் கழகத்தின் பிள்ளைகள். ஒரு சொல் வெல்லும், ஒரு சொல் கொல்லும் என்பார்கள். இப்பிள்ளைகள் வெல்லும் சொற்களைப் பேசி வாகை சூடியிருக்கிறார்கள்.



சென்னை, சூளைமேடு, ஜெய் கோபால் கரோடியா அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில், பள்ளிக் கல்வித் துறை சார்பில் நடைபெற்ற விழாவில் நேற்று முன்தினம் (20.11.2024) பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அரசுப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கான ”மகிழ் முற்றம் கையேட்டினை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் பள்ளிக் கல்வித் துறை அரசு செயலாளர் திருமதி சோ.மதுமதி, சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா.எழிலன். பெருநகர சென்னை மாநகராட்சிப் பணிகள் குழுத் தலைவர் நே.சிற்றரசு, பள்ளிக் கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், இணை இயக்குநர்கள் திருமதி சசிகலா, குமார், முதன்மைக் கல்வி அலுவலர் முனைவர் அ. புகழேந்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. – அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

# திருப்பெரும்புதூர் சட்டமன்றத் தொகுதிக் கழகச் செயல்வீரர்கள் கூட்டம்!

### படப்பை ஆ.மனோகரன் தலைமை! பட்டூர் எஸ்.ஜபருல்லா வரவேற்புரை! எஸ்.டி.கருணாநிதி - ந.கோபால் - கோ.சத்தியமூர்த்தி முன்னிலை! கே.ஜி.பாஸ்கர் சுந்தரம் பங்கேற்பு!

காஞ்சிபுரம், நவ. 22- காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருப்பெரும்புதூர் சட்டமன்றத் தொகுதி தி.மு.கழகச் செயல்வீரர்கள் கூட்டம் 24.11.2024 - ஞாயிறு காலை 10 மணியளவில் சிக்கராயபுரம், குன்றத்தூர் - மாங்காடு சாலையில் உள்ள கார்த்திக் பேலஸ் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு குன்றத்தூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் தலைமை வகிக்கிறார்.

மாங்காடு நகரக் கழகச் செயலாளர் பட்டூர் எஸ்.ஜபருல்லா வரவேற்புரையாற்றுகிறார்.

திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் எஸ்.டி.கருணாநிதி, தெற்கு ஒன்றியச் செயலாளர் ந.கோபால், குன்றத்தூர் நகரச் செயலாளர் கோ.சத்தியமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட அவைத் தலைவர் த.துரைசாமி, தொகுதி தேர்தல் பொறுப்பாளர் கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், எம்.ஆர்.சீனிவாசன், மா.கணேஷ்பாபு, சரஸ்வதி மனோகரன், சாந்தி சதீஷ்குமார், மருத்துவர் டி.பி.செந்தில்குமார், பொன். ரமேஷ் கவி, எஸ்.கண்ணன், ஜா.செந்தில் தேவராஜ், ஆர்.கே.சையத் யூசுப் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், அணிகளின் நிர்வாகிகள், வார்டு - கிளைக் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், பி.எல்.ஏ.2, பாக முகவர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் பங்கேற்கின்றனர்.

இக்கூட்டத்தில் 2026 சட்டமன்றத் தேர்தல் பணி, நவம்பர் 27 - இளைஞர் எழுச்சி நாள் விழா, கழக வளர்ச்சி குறித்து ஆலோசிக்கப்படுகிறது.

திருப்பெரும்புதூர் பேரூர்க் கழகச் செயலாளர் எஸ்.சதீஸ்குமார் நன்றி கூறுகிறார்.

## கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் தா.மோ.அன்பரசன் பரிசுகள் வழங்குகின்றனர்!

# குன்றத்தூர் தெற்கு ஒன்றியத்தில் மாநில அளவிலான கராத்தே போட்டி!

### ஒன்றியக் கழகச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் அறிவிப்பு!

காஞ்சிபுரம், நவ. 22 - குன்றத்தூர் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

இளம் தலைவர் - தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. மற்றும் ஷிஞ்சி டாய் கராத்தேடு இன்டர்நேஷனல் தமிழ்நாடு குளோபல் சிட்டோ ரியோ கராத்தேடு இந்தியா தமிழ்நாடு, இணைந்து நடத்தும் மாநில அளவிலான கராத்தே போட்டி 24.11.2024 ஞாயிற்றுக்கிழமை காலை9.00 மணியளவில் வைப்பூர் ஊராட்சி, வஞ்சுவாஞ்சேரி ராசி இன்ஜினியர் கல்லூரியில் ஒன்றியக் கழகச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் தலைமையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர், சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் போட்டியை துவக்கி வைத்து, பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்கள்.

இதில் திருப்பெரும் புதூர் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் மீஞ்சூர் கே.பாஸ்கர் சுந்தரம், குன்றத்தூர் ஒன்றிய குழுத் தலைவர் சரஸ்வதி மனோகரன், குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் ஏ.வந்தே மாதரம், குன்றத்தூர் ஒன்றிய குழு துணை தலைவர் திருமதி. உமா மகேஸ்வரி வந்தேமாதரம், மாவட்ட பிரதிநிதி எல்.டி.ஆர்.டாக்டர். இளைய கட்டபொம்மன், ஒன்றிய கழக நிர்வாகிகள் மு சுப்பிரமணி வ.நந்தகோபால், இ.மணி, வாசுகிமகேஷ், சி.பார்த்த சாரதி, வி.அரி, மு.ராஜேந்திரன், மா.பரிமேலழகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் ஒன்றிய இளைஞர் அணி நிர்வாகிகள் ப.அறிவொளி, எல்.சுதாகர், க. பா.ஆடலரசு, மா.சே.பிரகாஷ், ரா.தீபக்ராஜ் ஒன்றிய மாணவர் அணி நிர்வாகிகள் அ.ஜமீர், இரா.குமரவேல், செ.பார்த்திபன், இ.பாலாஜி, ஆர்.சையத்ரமிஸ், பொன்.இளையபாரதி, மாவட்ட, ஒன்றிய அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள், சங்கீதா வேலு,பொன். ரமேஷ் கவி, எஸ். கர்ணன், மலர்விழி தமிழ் அமுதன், கு.ஏழுமலை, லட்சுமி ஞானசேகரன், ச.பாலகிருஷ்ணன், ஜி.எ.ராயப்பன்,

தினேஷ் கந்தசாமி, ம. ரேவதி, கே.என்.சி.சத்தியமூர்த்தி, வி.எஸ். கோதண்டராமன், என்.எஸ்.இளங்கோ, மகாலட்சுமி எட்டியப்பன், மல்லிகா நடராஜன், சோபா ரகுநாதன், ஜி.இருசப்பன், ஏ.இ. பரசுராமன், ம.அசோக் குமார், ஏ.இ.பஞ்சாட்சரம், ப.வேல்முருகன், ச.ரஞ்சி த்குமார், இரா.சந்திரசேகர், மூ.குமார், வ.வீரபாண்டி யன், ரா.தமிழ்தாசன், க. யுவராணி, என்.அரி முத்து, உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய அணிகளின் நிர்வாகி கள், கிளைக்கழக செயலாளர்கள், கிளைக் கழக இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி அமைப்பாளர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேணுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தில் - ஒப்பந்த அடிப்படையில்

# பணியமர்த்த விரிவான விதிமுறைகள் அடங்கிய விவரங்கள்!

### வலைதளத்தில் வெளியீடு!

சென்னை, நவ. 22 - தமிழ்நாடு அரசு நிறுவனமான அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் பெருமளவில் இந்திய பணியாளர்களை குறிப்பாக தமிழக பணியாளர்களை 1978ம் ஆண்டு முதல் பல்வேறு நாடுகளில் வெளிநாட்டு வேலைகளில் பணியமர்த்தி வருகிறது.

இந்நிறுவனத்தின் செயல்பாடுகளை மேலும் விரிவாக்கும் பொருட்டு, வெளிநாட்டு நிறுவனங்களுக்கு தேவைப்படும் மனித வளத்தினை இந்நிறுவனத்திற்கு பெற்றுத் தருவதற்கு வெளிநாட்டில் பணியாளர்களை பணியமர்த்துவதற்கான நடைமுறைகள் அறிந்த ஆலோசகர்கள்/ ஆலோசனை முகவர்கள் (Consultant/Consultant Agencies) ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தி உள்ளது.

ஆலோசகர்கள்/ஆலோசனை முகவர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்துவதற்கான விரிவான விதிமுறைகள் அடங்கிய விவரங்கள் www.omcmanpower.tn.gov.in என்ற இந்நிறுவன வலைதளத்தில் குறிப்பிடப்பட் டுள்ளது.

எனவே, உரிய தகுதி மற்றும் அனுபவம் உள்ள ஆலோசகர்கள் /ஆலோசனை முகவர்கள் (Consultant/Consultant Agencies) இந்நிறுவன வலைதளத்தில் குறிப்பிட்டுள்ள படிவங்களை பூர்த்தி செய்து 31.12.2024 தேதிக்குள் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் (தமிழ்நாடு அரசு நிறுவனம்) எண்.42. ஆலந்தூர் சாலை, திரு.வி.க. தொழிற்பேட்டை கிண்டி, சென்னை 600032 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## தி.மு.க. வர்த்தகர் அணி

# மாநில நிர்வாகிகள் - மாவட்ட தலைவர்கள் - அமைப்பாளர்கள் கூட்டம்!

### தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசி முத்துமாணிக்கம் அறிவிப்பு!

தி.மு.க. வர்த்தகர் அணி மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட தலைவர்கள் - அமைப்பாளர்கள் கூட்டம் 25.11.2024 திங்கட்கிழமை காலை 11.00 மணியளவில் அண்ணா அறிவாலயத்திலுள்ள கழக அலுவலகத்தில் எனது தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட தலைவர்கள் - அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:- 1. தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள்;

2. கழக ஆக்கப் பணிகள் - குறித்து.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18
நாள்- 20.11.2024

**காசி முத்துமாணிக்கம்**
செயலாளர்
தி.மு.க. வர்த்தகர் அணி



தாம்பரம் மாநகராட்சி மண்டலம்:4 49வது வார்டு சண்முகம் மார்க்கெட் சாலையில் போக்குவரத்து பாதிக்கப்படுவதால் மார்க்கெட்டை ஒழுங்குபடுத்தவும் முத்துரங்க முதலி பூங்கா மறுசீரமைக்கவும் மாநகராட்சி வணிக வளாகத்தில் உள்ள வணிகர்களின் கோரிக்கையை ஏற்று கட்டிட பராமரிப்பு குறித்து 4வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி. காமராஜ் ஆய்வு மேற்கொண்டார். உடன் மாமன்ற உறுப்பினர் எல் பெரியநாயகம் மாநகராட்சி துணை ஆணையாளர் சகிலா பானு,சி சுரேஷ், பொறியாளர் தங்கதுரை, ஜெய்சங்கர்,பகுதி நிர்வாகிகள், வட்ட நிர்வாகிகள் மார்க்கெட் சங்க நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் ஆய்வின் போது உடன் இருந்தனர் .